# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:79** **தேதி:-20.11.2015**

## 7ஆவது ஊதியக் குழு பரிந்துரையும் சில செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

நீதியரசர் A.K.மாத்தூர் தலைமையிலான 7ஆவது மத்திய ஊதியக் குழு தனது பரிந்துரைகளை 19.11.2015 அன்று நிதியமைச்சர் அருண் ஜேட்லியிடம் சமர்ப்பித்துள்ளது. பத்தாண்டு காலத்திற்கு பின் மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை மாற்றியமைக்க நியமிக்கப்பட்ட அந்தக்குழு ஊழியர்களுக்கு 14.29% ஊதிய நிர்ணய பலனை மட்டுமே வழங்கியுள்ளது. இது மிகவும் சொற்பமான ஊதிய உயர்வு. இதுவரை எந்த ஒரு ஊதியக் குழுவும் இது போன்ற மோசமான பரிந்துரைகளை கொடுத்ததில்லை என மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனத்தின் பொது செயலாளர் கூறியுள்ளார். தேசிய நடவடிக்கைக் குழுவின் தலைவர்கள் 20.11.2015 அன்று புதுடெல்லியில் கூடி அறிக்கையினை ஆய்வு செய்து எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட உள்ளனர்.

**20,000 கோடிவரி ஏய்ப்பு பிரச்சனை தொடர்பாக பேச்சு வார்த்தைக்கு வோடோபோன்:-** மத்திய அரசுடன் உள்ள 20,000 கோடி ரூபாய் வரி தாவா தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த இங்கிலாந்து தொலை தொடர்பு நிறுவனமான வோடோபோன் ஒத்துக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டு முதல் வோடோபோன் நிறுவனம் வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருந்தது. அதற்காக 8,000 கோடி ரூபாய்களை கட்ட வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் வோடோபோன் நிறுவனம் கட்டாமல் ஏமாற்றி வந்தது. அது தற்போது வட்டி மற்றும் அபாரதத்துடன் 20,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலையில் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த வோடோபோன் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

**COAL INDIA நிறுவனத்தின் பத்து சதவிகித பங்குகளை விற்க அமைச்சரவை முடிவு:-** 18.11.2015 அன்று கூடிய மத்திய அமைச்சரவை COAL INDIA நிறுவனத்தில் உள்ள தனது பங்குகளில் பத்து சதவிகிதத்தை விற்க முடிவு செய்துள்ளது. அதுமட்டுமல்லாமல் COCHIN SHIPYAARDல் INTIAL PUBLIC OFFER கொடுக்கவும் முடிவு செய்துள்ளது. இந்த இரண்டு முடிவுகளின் காரணமாக 21,000 கோடி ரூபாய்களை திரட்ட முடிவு செய்துள்ளது. மத்தியில் ஆளும் நரேந்திர மோடி அரசாங்கம் செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தில் இருந்து எந்த ஒரு பாடமும் கற்றுக் கொண்டதாக தெரியவில்லை.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**